# ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச் சபை

(ஆங்கில மூலத்தின் மொழி பெயர்ப்பு)

கொள்கை P.036

தலைப்பு: **வீட்டுப்பணி**

அங்கீகரிக்கப்பட்டது: நவம்பர் 24, 1999, **ஏப்பிரில் 16, 2008**
திருத்தப்பட்டது:
மீள்பார்வை:

## தலைப்பு: வீட்டுப் பணி

### 1.0 குறிக்கோள்

மாணவர்களைச் செயற்படவைப்பதும் பொருத்தமானதுமான கற்றல் செயற்பாடே வீட்டுப்பணி என்ற கல்விச் சபையினது நம்பிக்கையினை நிலைநிறுத்தல்

செயல் நோக்குடன் நன்கு திட்டமிடப்பட்ட வீட்டுப்பணி நேரடியாக மாணவரது பாடசாலைச் செயல் திட்டம் மற்றும் ஒன்ராறியோ பாடவிதானத்தின் எதிர் பார்ப்புகளுடன் நேரடித் தொடர்புடையது என்ற கல்விச் சபையின் கடப்பாட்டினை வலியுறுத்தல்

### 2.0 வரைவிலக்கணங்கள்

மாணவரின் கற்றலை மேம்படுத்துதற்காக ஆசிரியர் வழங்கும் வகுப்பிற்குப் புறம்பான கற்றல் பட்டறிவே *வீட்டுப்பணியாகும்.* வீட்டுப்பணியினை ஆசிரியர்கள் மீள்பார்வை செய்ய வேண்டும். அப்போது தான் மாணவர்கள் தற்சமயம் எந்நிலையில் உள்ளனர் என்றும் அவர்களது கற்றல் இலக்கினை அடைய திறமையாக நெறிப்படுத்துவது எப்படி என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்வார்கள்

கீழே காண்பிக்கப் பட்டது போன்று ஒவ்வொன்றும் வித்தியாசமான பெறுபேறுகளையுடைய நான்கு வகையான வீட்டுப்பணிகள் சாதாரணமாகக் கொடுக்கப் படுகின்றன.

| வகை | வரைவிலக்கணம் | எதிர்பார்க்கும் பெறுபேறு | செயற்படுத்தல் |
|---|---|---|---|
| செய்து முடித்தல் | பாடசாலை நேரத்தில் செய்வதற்காக வழங்கப் பட்டு அதனைச் செய்து முடிக்காத பணி எதுவாயினும் | வகுப்பறைச் செயல் திட்டத்தினை அன்றன்றே செய்து முடிப்பதற்கு உதவுகிறது | நூள்ந்த அடிப்படையில் வீட்டுப்பணி நிறைவு செய்ய வேண்டியதாயின் அதனை வகுப்பறைச் செயல் திட்டத்திலிருந்து வேறு படுத்திக் காட்ட வேண்டும். |
| பயிற்சி | வகுப்பினிலே கற்பிக்கப் பட்ட திறன்களையும் கருதுகோள்களையும் மீள்பார்வை செய்வதுடன் மீள் வலியுறுத்தும் பணி எதுவாயினும் | புதிதாகக் பெற்ற திறன்களை பயிற்சி செய்து மாணவர்கள் வல்லமை பெற உதவுகிறது | தேவையான திறன்களை சுயமாக உபயோகிக்கும் திறமையை மாணவர்கள் பெற்றிருந்தால் தான் வீட்டுப்பணி பயனுள்ளதாக இருக்கும் |

| | | | |
|---|---|---|---|
| ஆயத்தம் செய்தல் | இனி வரவுள்ள பாடங்கள் அல்லது வகுப்புகளுக்கு மாணவர்களைத் தயார் நிலைக்கு எடுத்துச் செல்லும் எந்த வேலைய-ாயினும் | இனிமேல்படிக்கும் அலகுகளுக்குக் தேவையான பிற்புலத் தகவல்களைப் பெறுவதை அல்லது முன்னைய அறிவினையும் அனுபவங்களையும் எடுத்துச் செல்ல ஊக்குவித்தல் | |
| தொடர்ச்சி | புதிய சந்தர்ப்பங்களிலே கற்றல் பற்றிய தேடலுடன் அதனை மெருகூட்ட அல்லது வகுப்பறைக் கற்றலினை ஒன்றிணைத்து விரிவு படுத்தும் எந்தப் பணியும் | மாணவர்களின் பிரச்சினைத் தீர்வு, ஆக்கபூர்வச் சிந்தனை மற்றும் நுண்ணறிவு பூர்வ சிந்தனையையும் ஊக்குவிக்கும் | தொடர்ச்சி வீட்டுப் பணி செயல்விளைவுள்ளதாக இருப்பதற்கு மாணவன் பாடவிதானம் உள்ளடக்கத்தினைப் சுயமாகக் கற்க வேண்டும் என்பதில்லை. மாறாக, மாணவர்கள் கற்றலை பற்றிய ஒரு ஆழமான விளக்கத்தினைப் பெற்று அதனை உண்மையான உலக நியதியோடு தொடர்பு படுத்த வேண்டும் |

## 2.0 கொள்கை

<u>பயனுறுதிமிக்க வீட:டுப்பணி ஒப்படைப்பு ஏவல்கள்</u>

2.1. வீட்டுப் பணி ஒப்படைப்பு ஏவல்கள் மிகத் தெளிவானவையாகவும் கவனமாகத் திட்டமிடப் பட்டவையாகவும் தேவை ஏற்படும் பொழுது இணை ஆசிரியர்கள், சுழற்சிமுறை மற்றும் பாடத்திற்கான ஆசிரியர்களின் ஆலோசனையையும் உட்படுத்தும். மேலும் தேவையான பொழுது வீட்டுப் பணி ஒப்படைப்பு ஏவல்கள் குழந்தையினுடைய பிரத்தியேக தேவைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் வேற்றுமைப் படுத்தப் பட்டிருக்க் வேண்டும்.

3.2 மாணவருடைய அதிஉயர் தர கற்றல் மற்றும சாதனை ஆகியவற்றினை ஊக்கிவிப்பதுடன் மாணவர்கள் தொடர்ந்தும் கற்பதற்கு விருப்பத்தினை ஏற்படுத்துவதே பல்விதமான வீட்டுப் பணிகளினது முக்கிய நோக்கம் ஆகும் பயனுறுதிமிக்க வீட:டுப்பணி ஒப்படைப்பு ஏவல்கள்:

(அ) பாடவிதான அடடிப்படையில் மாணவருடைய விருத்திகுரியதும் மற்றும் தனிப்பட்ட தேவைகளை வேறுபாட்டின் மூலமும் மாற்றி அமைத்தல் மூலமும் ஈடுசெய்ய வேண்டும்.

(ஆ) வருங்காலக் கற்றலுக்கு மீள ஊட்டலாக அமையுமம் வண்ணம் அதில் குறிப்புக்கள் தரப்பட்டிருகட்க வேண்டும்

(இ) வகுப்பறையினுக்கு வெளியே மேலதிகமான கற்பித்தல் தேவையில்லாதவாறு அமைக்கப்பட்டிருப்பதுடன் மாணவருடைய கற்றலுக்கு உகந்ததாயும் ஈடுபாடு காட்டக் கூடியதாகவும் அமைய வேண்டும். தம்மிடமிருந்து எதிர்பார்க்கப் படுது என்ன என்பதை பாடசாலையை விட்டு வீட்டுக்குப் செல்லு முன்னரே மாணவர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

(ஈ) மாணவர்களுக்கு வாய்ப்புக் கிட்டாத மூலவளங்களையோ அல்லது தொழில் நுட்பத்தினையோ உபயோகிக்க வேண்டிய தேவை ஏற்பட மாட்டாது .

(உ) பிள்ளைகளினுடைய கற்றலுக்கு உதவும் வகையின் பெற்றோர்கள் /பாதுகாவலர்கள் ஈடுபடக் கூடியவாறு திட்டமிடப் படுதல் வேண்டும். ஆனால் பதிய கருதுக்கோள்கள் கற்பிக்க வேண்டியதில்லை.

<u>முழுமையாகச் செய்து முடிக்கப் படாத வீட்டுப் பணி ஒப்படைப்பு ஏவல்களுக்கான செயல் விளைவுகள்</u>

3.3 நிறைவு செய்யாத வீட்டுப் பணியினுக்கு பொதுவாக அதற்கு ஏற்றவகைனயில் முற்போக்கான செயல் விளைவுகளே வழங்கப்படும். தண்டனைகள் வலுவான ஊக்கக் கேடான விளைவுகளை ஏற்படுத்துவதால் அவை ஏற்புடையவை அல்ல.

<u>வீட்டுப் பணி பற்றிய தேர்ச்சி அறிக்கை வழங்கல்</u>

3.4 ஆரம்பப் பாடசாலைக்கான மாகாண மாணவர் தேர்ச்சி அறிக்கையினிலே கற்றல் திறன்களுக்கான பகுதியில் சுயாதீன வேலை மற்றும் வீட்டுப்பணி நிறைவு செய்தல் என்ற பகுதியிலும். இரண்டாம் நிலைப்பாடசாலை மாணவர் தேர்ச்சி அறிக்கையில் சுயாதீனமாக வேலை செய்தல் மற்றும் வேலைக் குணவியல்புகள்/ வீட்டு பணி பகுதியிலும் வீட்டுப்பணி பற்றி அறிவிக்கப் படுகிறது.

<u>வீட்டுப் பணிக்கான நேரம், வழங்குமுறை மற்றும் அளவு</u>

மாணவர்களுக்குக் கொடுக்கப் படுகின்ற வீட்டுப் பணியின் அளவு ஆரம்பப் பாடசாலை, இடைநிலைப் மற்றும் ஊயர்தரப் பாடசாலையைப் பொறுத்த மட்டிலே வேறுபட்டதாய் அமைய வேண்டும். கொடுக்கப் பட்ட வீட்டுப் பணிக்காக எவ்வளவு நேரத்தினை ஒரு மாணவன் செலவிடலாம் என்பது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது. அவை,மாணவனின் தேவைகள், கற்றல் திறன்,பாடம், பாடசாலைப் பாட ஒழுங்து, பாடசாலை நடைமுறை, பரீட்சைக்கு அண்மை, பரீட்சைகள், மற்றும் வீட்டுப் பணி ஒப்படைப்புகளுக்கான தேதிகள் ஆகும். வீட்டுப் பணி செய்வதற்காகச் செலவிட்ட நேரம் எப்பொழுதும் அவரது தனிப்பட்ட மற்றும் குடும்பத்து நலனுக்கான முக்கியத்துவத்துடன் எமது இன்றைய சமூகத்தில் காண்பதான பல்வேறு வகையான குடும்ப கடப்பாடுகளுக்கும் நேரம் ஒதுக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

3.5 <u>பாலர்வகுப்பு</u>

பாலர் பிரிவு மாணவர்களுக்கு வீட்டுப்பணி வழகப் கூடாது. பெற்றோர்கள் காட்டும் ஈடுபாட்டிற்கும் மாணவர் சாதனைக்குமிடையே ஒரு வலிமையான தொடர்பு உள்ளது. இதன் விளைவாக ஆரம்பக் கற்றல் செயற்பாடுகளான விளையாமட்டு, பேச்சு மற்றும் ஆங்கிலத்தில் அல்லது குழந்தையின் தாய் மெழியில் ஒன்றாகச் சேர்ந்து வாசித்தல் போன்றவற்றிலே குடும்பங்கள் ஈடுபடவேண்டும் என ஊக்குவிக்கப் படுகின்றனர். வீட்டினை அடிப்படையாக் கொண்ட ஆரம்பகால கற்றல் செயற்பாடுகளுக்கான மூலவளங்களை ஆசிரியர்கள் வழங்கலாம். .

3.6 <u>தரங்கள் 1 முதல் 6 வரை</u>

ஒவ்வொரு நாளும் ஆங்கிலத்திலோ அல்லது அவரது முதல் மொழியிலோ ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு அல்லது அவர்களுடன் வாசித்து விடுவதற்கும் மாணவர் சாதனைக்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. இதன் விளைவாக ஆரம்ப வகுப்புகளில் தரப் படுகின்ற வீட்டுப் பணிகள் பெரும்பாலும் வாசித்தல், பல்வேறு வகையான விளையாட்டுக்கள், கலந்துரையாடல் மற்றும் குடும்பதினருடன் சிறு துண்டங்களால் கட்டி எழுப்புதல், மற்றும் சமையல் செய்தல் போன்ற கலந்துரையாடலுக்கான செயற்பாடுகள் ஒப்படைத்தல் வீட்டுப் பணியில் வழங்கப் படும். ஆரம்பப் பாடசாலையின் மேல் தர மாணவர்களுக்கும் கனிஷ்ட பிரிவுகளில் செயல் நிறைவான வீட்டுப் பணிகள் சுயமாக இயங்கும் தன்மையானவையாக அமையும் . இரண்டு வகையினிலுமே நிறைவு செய்வதற்கும், பயிற்சிக்காகவும், தயார்நிலை அடையவும் அல்லது தொடர்வதாகவும் கொடுக்கப் படுகின்ற வீட்டுப் பணி பொருத்தமானதாகவும் குழந்தையின் தனிப்பட்ட தேவைகளுகளினைப் பிரதிபலிக்கும் வகையிலும் வேறுபடுத்தியிருக்க வேண்டும்..

3.7 <u>தரங்கள் 7 முதல் 8 வரை</u>

இடைநிலைப்பாடசாலை வயதுடைய மாணவர்கள் வீட்டுப் பணியினை நிறைவு செய்வது மாணவரின் பாடசாலைச் சாதனையை மேலும் சிறக்க வைக்க உதவும். 7 மற்றும் 8ந் தரத்தில் உள்ள மாணவர்கள், நிறைவு செய்வதற்காகவோ, பயிற்சிக்காகவோ, தயார்நிலக்காகவோ அல்லது தொடர்ச்சியாகவோ செய்வதற்கான வீட்டுப்பணி ஏவல்கள், இணையான மற்றும் சுழற்றி முறை ஆசிரியர்களின் பங்களிப்பினையும் பெற்று, தெளிவாகவும் கவனமாகவும் தயாரிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு ஏற்றதாகவும் அமைய வேணடும். வீட்டுப் பணி முழுமையாகச் செய்து முடிப்பதற்கான நேரம் ஒரு மணி அல்லது அதற்குக் குறைவானதாக. இருக்க வேண்டும்.

3.8 <u>தரங்கள் 9 முதல் 12 வரை</u>

வீட்டுப் பணியினை நிறைவு செய்வது சிறப்பாக உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்குப் பாடசாலையில் சிறந்த் சாதனை படைக்க துணை செய்யம். 9 முதல் 12ந் தரம் வரை கல்வி கற்கின்ற பிள்ளைகளுக்கு வீட்டுப்பணி மிகவும் தரமிக்கதாகவும் கவனமாகவும் திட்டமிடப் பட்டவையாகவும் இரண்டு மணித்தியாலங்களில் அல்லது அதற்குக் குறைந்த நேரத்தில் முடிக்கக் கூடியவை-வயாகவும் அமைய வேண்டும் பிள்ளைகள் உயர் வகுப்பு மட்டங்களிலே பாடசாலை மாற்றம் அடைகின்ற பொழுது வீட்டுப்பணியால் ஏற்படக் கூடிய மன அழுத்தம் அதிகமாக இருக்கும். இதன் விளைவாக 9ந்தர மாணவர்களுக்கான வீட்டுப் பணி பாட ஆசிரியர்களளுடன் கலந்துரையாடி மிகவும் கவனமாகத் திட்டமிடுதல் அவசியம்.

<u>பொது</u>

3.9 பாடசாலை வருடத்தின் நாளேட்டிலிலே குறிக்கப் பட்ட விடுமுறை நாட்களிலோ அல்லது முக்கியத்துவமான நாட்களிலோ வீட்டுப் பணி ஒப்படைப்பு ஏவப்படமாட்டாது.

3.10 வீட்டுப் பணி ஒப்படைப்பினைக் கூடிய அளவு குடும்பங்கள் வீட்டுப் பணியினுக்கு உதவும் வண்ணம் வீட்டுப் பணி செய்வதற்கான நேரத்திற்கும் பாடசாலை முடிவுற்ற பின்னர் பிள்ளை செல்வதற்கான பாட நெறி சாரா செயற்பாடுகளுடன் தனது மற்றும் குடும்பத்தினர் சார்ந்த நலம் பேணுதற்குமான நேரத்திற்கு மிடையே ஒரு சம நிலையினை ஏற்படுத்துதல் வேண்டும்.

தமது பிள்ளைகளின் வீட்டுப் பணி எதிர்பார்ப்புகள் சம்பந்தமாய் விசாரங்ககள் உடைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளையினுடைய ஆசிரியரை அல்லது பாடசாலை அதிபரைக் கண்டு விளக்கம் பெற ஊக்குவிக்கப் படுகிறது.

3.11 கொள்கை P063 பார்க்கவும்: பிரதானமான ஓப்படைப்புகள் மற்றும் செயல் முறைகளின் மீதான பரீட்சைக்கு முன்னான இசை அமைவு. ஜூன் 27, 2007ல் அங்கீகரிக்கப் பட்டது

<u>தொடர்ச்சியாகப் பாடசாலை வராது நிற்பவருக்கான வீட்டுப் பணி</u>

3.12 குடும்பம் அல்லது பெற்றோர்களால் தொடக்கப் பட்டு தொடர்ச்சியாகப் பாடசாலைக்கு வராது நிற்கும் மாணவர்களுக்கு விபரமான வகுப்பறை பணியினையும் வீட்டுப் பணி வேலைகளையும் ஆசிரியரகளிடமிருந்து எதிர் பார்க்க முடியாது.. சுகவீனம் காரணமாக பிள்ளை நீண்ட காலம் பாடசாலை வராவிட்டால் பெற்றோர்கள் அதிபரைச் சந்தித்து மாற்று வழிகள் பற்றி ஆராயலாம்

<u>கடமைக் கூறுகளும் பொறுப்புக்களும்</u>

3.13 பாடசாலை - வீடு இரண்டிற்கும் இடையே தன்னுறுதி மிக்கதும் திறந்த மனதுடனுமான கூட்டு முயற்சியான வீட்டுப் பணி முறைமை மாணவர் வெற்றியில் ஒரு தன்னுறுதியான தாக்கத்தினை எற்படுத்தும்.

(a) <u>புாடசாலை ஊழியர்களின் பொறுப்புகள்:</u>

(i) பாடசாலை வீட்டுப் பணி வழிகாட்டல்களை பாடசாலை ஆண்டின் ஆரம்பத்திலேயே ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் மாணவர்கள் உபயோகத்திற்காக தொடர்பாடல் செய்தல்.

(ii) பாடசாலை எங்கும் காணும் மூலவளங்களையும் மற்றும் வீட்டுப்

பணியினுக்கு உதவக் கூடிய பயிற்சிகளையும் ஒன்றிணைத்தல். உதாரணமாக நிகழ்ச்சி நிரல், நூலக வசதிகள், அறிவு சார் உதவிச் செயல் திட்டங்கள் ஆகியவற்றினை உபயோகித்தல், வலுவான தொடர்பாடலை சுழற்சி முறை ஆசிரியர்களுடன் ஏற்படுத்தி நிய-ாயமான அளவான ஒப்படைப்பு வீட்டுப் பணியினை மாணவர்களுக்கு வழங்குதல். மற்றும்

(iii) பயனுறுதி மிக்க வீட்டுப் பணியினுடைய நோக்கம் மற்றும் தமது பிள்ளைகளுக்கு (உதாரணமாக செய்தி அறிக்கை,திறந்த இல்ல

நிகழ்வுகள் மற்றும் இணைய தளங்கள்) உதவும் வகையில் குடும்பங்களுடன் செயல் முறைகள் பற்றிய தகவல்களை அறிவித்தல்

(b) <u>பின்வருவனவற்றினுக்கு ஆசிரியர்கள் பொறுப்பாளிகள்</u>

(i) குடும்பத்துக்கும் மாணவர்களுக்குமிடையே பங்காளிளாதலை ஊக்குவித்து நேரப்டிபயும், தொடர்ச்சியாகவும் தொடர்பாடல் செய்து குடும்பங்களின் வீட்டுப் பணி முறைகளுக்கு உதவுதல்

(ii) வீட்டுப்பணி ஒப்படைப்பு ஏவல்களை அவற்றின் குறிக்கோள்களையும் எதிர்பார்க்கப் படும் விளைவுகளையும் தெளிவாக புலப்படுத்தும் வகையினில் திட்டமிடுதல்

(iii) பாடசாலை ஆண்டின் முற்பகுதியிலேயே வீட்டுப் பணி எதிர் பார்ப்புகளைப் பற்றி மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தெரிய வைத்தல்.

(iv) வழுங்கப் பட்ட வீட்டுப் பணி வகுப்பறையில் வழுங்கப் பட்ட பாட போதனையுடன் நேரடித் தொடர்புடையதாகவும் தெளிவான, பயன் கருதிய மற்றும் செயல் நோக்குடைய ஈடுபாடுகாட்டும் செயல்விளைவுகள் ஆவதை உறுதிப் படுத்துதல்

(v) மாணவர்களின் வயதிற்கு ஏற்ற முறையிலும், விருத்தி நிலைக்கு ஏற்றவாறும், கற்றல் முறை, திறன்கள் மற்றும் தனிப்பட்டவர்களது தேவைகள் ஆகியவற்றினுக்கும் ஏற்ற வண்ணம் வீட்டுப் பணி ஒப்படைப்புக்களை வழங்குதல்

(vi) மாணவர்களுக்கு வீட்டுப் பணியினை முழுமையாகச் செய்து முடிப்பதற்கு வேண்டிய திறன்களை வழங்கி திறமை பெற்ற சுயமான மாணவர்களாகவும் ஆக்குதல் மற்றும்

(vii) இணை மற்றும் சுழற்சி முறை ஆசிரியர்கனளின் பங்களிப்புடன் வீட்டுப்பணியினை தெளிவானதாவும் கவனமாகவும் திட்டமிடுதல்

(c) <u>கீழ் உள்ளவற்றினுக்கு மாணவர்கள் பொறுப்பாளிகள்;</u>

(i) ஒப்படைப்பு வீட்டுப் பணி தனக்கு முழுமையாக விளங்கிவிட்டது என்பதனை உறுதிப் படுத்துதல் .உதாரணமாக. ஓப்படைப்புகள், வகை, மற்றும் நேர ஒதுக்கீடு.மற்றும் ஓப்படைப்பகள் அல்லது எதிர்பார்ப்புகள் பற்றி தெளிவாக்கமோ உதவியோ தேவை எனில் ஆசிரியரிடம் கேட்டுப் பெறுதல்.

(ii) தனது நிகழ்சிக் கோவையிலோ அல்லது மாணவர் திட்டமிடும் பதிவேட்டிலோ ஒப்படைப்பு ஏவல்களைக் குறித்து வைத்தல்.

(iii) விட்டுப் பணியினை தனது உச்சத்திறமைக்கு ஏற்ற விதத்திலே நேரத்திற்குச் செய்து முடித்தல் மற்றும்

(iv) நேரத்தியும் மற்றும் பொருட்களையும் செயலாட்சி செய்தல் உதாரணமாக: தேவையான பொருட்களைவ வீட்டினுக்க எடுத்து வருதல்

(d) <u>கீழ் உள்ளவற்றினுக்குப் குடும்பத்தவர் பொறுப்பாளிகள்;:</u>

(i) பிள்ளையினுடைய ஆரம்பக் கல்விக்கான வருடங்களிலே முழுக்காலமும் ஆங்கிலத்தில், பிரெஞ்சு (பிரேஞ்சு மொழி அமிழ்வு) மற்றும்/ அல்லது குடுமப்பதினரின் முதல் மொழியில் வாசித்துவிடுதல்.

(ii) சூழல் ஒன்றினை வழங்குதல்: அதாவது பணி செய்வதற்கான இடம்,. இடையீடு அற்ற குறிப்பிட்ட கால நேரம், பொதுவாகவே வீட்டில் அல்லது மாறாக வீட்டுப் பணி மன்றம் போன்ற வீட்டுப்பணி செய்வாதற்கான அமைவிடம்.

(iii) பிள்ளையினுடைய வீட்டுப் பணியினை நீங்கள் செய்து விடாமல் அவருக்கு வேண்டிய ஊக்கத்தினையும் தேவையான ஆதரவினையும் வழங்குதல்;

(iv) வீட்டுப் பணி, பாடவிதானத்திற்குப் பறம்பான செயற்பாடுகள் மற்றும் குடும்ப வேலைகள் ஆகிவற்றின் இடையே நேர்த்தியான ஒரு சமன் பாட்டினை ஏற்படுத்துதல்;

(v) உறங்கப் போகின்ற நேரத்தில் தனது வீட்டுப் பணியினை தொடர்ந்து செய்வதை , அது முழுமையாக முடிக்கப் படாமலிருந்தா்ல் கூட அதனை நிறுத்துதல்; மற்றும்

(vi) தங்களது பிள்ளை வீட்டுப் பணியினை பெரும்பாலும் செய்வதற்குத் தவறுமாயின் அல்லது சவாலாக அமையுமாயின் அல்லது வினாக்கள் உள்ளதாயின் வகுப்பு ஆசிரியரைத் தொடர்பு கொள்ளுதல்

## 3.0 தனிப்பட்ட செயல் ஆணைகள்

இந்தக் கொள்கையினை செயல்படுத்துதற்கான செயல்முறைகளை வெளியிடுவதற்கு கல்வி இயக்குனருக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.